குன்றத்தூரை சுற்றியுள்ள
சென்னை நவகிரக புராதான ஸ்தலங்கள்

Vaidika Pandit Sri Krishnaswamy Sastrigal Trust Collection



CUB
Trust and Excellence
SINCE 1964

With best compliment from :
சிட்டி யூனியன் பாங்க் லிட்
குன்றத்தூர் கிளை, சென்னை– 600 069.

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வணக்கம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவனர் பயில்வலி வலமுறை யிறையே!

-திருஞானசம்மந்தர், தேவாரம்

சென்னையில் உள்ள நவ(9)கிரக புராதன ஸ்தலங்களின் வரலாறு

		பக்கம்
சூரியன்	– திருஅகஸ்தீஸ்வரர் – கொளப்பாக்கம்	4
சந்திரன்	– திருசோமநாதேஸ்வரர் – சோமங்கலம்	7
குரு	– திருராமநாதேஸ்வரர் – போரூர்	14
ராகு	– திருநாகேஸ்வரர் – குன்றத்தூர்	19
புதன்	– திருமேனீஸ்வரர் – கோவூர்	24
சுக்ரன்	– திருவெள்ளீஸ்வரர் – மாங்காடு	30
கேது	– திருநீலகண்டேஸ்வரர் – கெருங்கப்பாக்கம்	34
சனி	– திருஅகஸ்தீஸ்வரர் – பொழிச்சலூர்	41
செவ்வாய்	– திருவைத்தீஸ்வரர் – பூந்தமல்லி	47

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

முன்னுரை : சென்னைக்கு அருகாமையில் நவக்கிரஹ ஸ்தலங்கள் என்பது: நான், படித்த குருகுலத்தில் குருநாதர் அவர்கள் கூறிய சிறுகதை ஆலய வரலாறுகளை கொண்டு நேரில் சென்றுபார்த்து இவ்வாலயங்களைப்பற்றி இரண்டாயிரத்து ஆறாம் வருடம் பிப்ரவரி மாதம் 18-ந் தேதி அன்று (18-2-2006) "ஆலயலஹம்" எனது நிகழ்ச்சியை ஒளிபரப்பிய ராஜ்டிவி நிலையத்தின் கோவூர், ஸ்ரீ தியாகராஜ சிவச்சாரியர் ஆகிய என்மூலம் பேட்டியாக ஒளிபரப்பிய அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடைப்பட்டவன் ஆகின்றேன். அதன்பின், சுற்றுலாத்துறை ஆணையர் அவர்கள், நேரில் வந்து பார்த்து சென்றார். இத்தலம் சுற்றுலாத்துறை அனுமதி பெறப்பட்டது. w.w.w.templetower.com கோவில் கோபுரதரிசனம் என்ற டாக்காட்மில் இவைகளை ஒளிபரப்பப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக எனது கனவான இந்த நவக்கிரஹ ஸ்தல புராதன வரலாற்றினை வெளியிடமுன் வந்துள்ள அன்பர் புதுவை திரு. வெ. சுப்ரமணியன், எண்கணித சோதிடர் அவர்கள் மூலமாக வெளியிடுவதை இறைவன் அருளாசியுடன் எல்லா நலமும், வளமும், பெற்றுவாழ வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்

தியாகராஜ தத்புருஷசிவாச்சாரியர்

ஸ்ரீ காமாட்சி சோதிட நிலையம், கோவூர்.

செல். 9382338194, 9789924095

CC-0.In Public Domain. Digitized by eGangotri Siddhanta eGangotri Gyaan Kosha

Valluvar Vandu Sri Muthulakshmi Collection, Velachery, Chennai

எல்லாம் வல்ல இறைவன் இந்த பிரபஞ்சத்தை இயக்குவதால், நாம் செய்த நல்வினை, தீவினை ஏற்ப வினைப்பயன்களை கிரகங்களின் (கோள்கள்) மூலம் துன்பங்களை நீங்கி இன்பமுடன் வாழ ஒன்பது கோள்களை வழிபட்டு மேன்மேலும் இன்பங்களை பெற வேண்டும்.

தென் இந்தியாவில் தமிழ் நாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பே சோழர், பாண்டியன் ஆட்சியும் தற்போதைய திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் கரையோரமாகவே நவக்கிரகங்களுக்கு சிறப்பான திருத்தலங்கள் உண்டு. அதில் பாபநாசத்தில் (சூரியன்), சேரன் மகாதேவியில் (சந்திரன்), கோடகநல்லூரில் (செவ்வாய்), குண்ணத்தூரில் (ராகு), முறப்பநாட்டில் (குரு), திருவைகுண்டத்தில் (சனி), ராஜபதியில் (கேது), தென்திருப்பேரேயில் (புதன்), சேர்ந்த மங்கலத்தில் (சுக்ரன்) சிவ பெருமானை வழிபட்டு மோட்சம் பெற்றதாக வரலாறு கூறுகின்றது.

அதேபோன்று, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகேயுள்ள தலங்களும் சிறப்பை தாங்கி உள்ளது. சூரியனார் கோவில் (சூரியன்), திங்களூரில் (சந்திரன்), வைத்தீஸ்வரனில் (செவ்வாய்), திருவெண்காட்டில் (புதன்), ஆலங்குடியில் (குரு), கஞ்சனூரில் (சுக்ரன்), திருநள்ளாரில் (சனி), திருநாகேஸ்வரத்தில் (ராகு), கீழ்பெரும் பள்ளத்தில் (கேது) தலங்களும் பிரசித்திபெற்றது.

CC-0. Thirumathi Lakshmi Collection by Muthulakshmi Research Academy,

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

தமிழ்நாட்டின் வடக்கேயுள்ள சென்னையிலும் நவக்கிரக புராதன ஸ்தலங்களும் மேற்கண்ட தலங்களை போன்று பல நூற்றாண்டு காலத்திற்கு முன்பே ஏற்பட்ட பழைய புராதன கோயில் ஆகும். கொளப்பாக்கத்தில் (சூரியன்), சோமங்கலத்தில் (சந்திரன்), பூந்தமல்லியில் (செவ்வாய்), கோவூரில் (புதன்), போரூரில் (குரு), மாங்காட்டில் (சுக்ரன்), பொழிச்சலூரில் (சனி), குன்றத்தூரில் (ராகு), கெருங்கபாக்கத்தில் (கேது) தலங்களும் சிறப்பை தரக்கூடிய தலங்களே, கீழே வரலாற்றை காண்போம்.

1. சூரிய பகவான்

(கொளப்பாக்கம்)

ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் சமேத அகஸ்த்தீஸ்வரர் ஆலயம், கொளப்பாக்கம் ஸ்ரீபெரும் புதூர்வட்டம், காஞ்சீபுரம் மாவட்டம்.

த்யாயேத் ஸூர்யமார்த்த கோடி கிரணம்
தேஜோமயம் பாஸ்கரம் பக்தாநாம் பயப்ரதம் தினகரம்
ஜ்யோதிர் மயம்சங்கரம் ஆதித்யம் ஜகதீஸமச்யுதமயம்
த்ரைலோக்ய சூடாமணிம் பக்தாபீஷ்ட வரப்ரதம் தினமனிம்
மார்தாண்டாத்யம் சுபம்.

அம்மை ஆனந்தவல்லி அம்பாள்சமேத ஸ்ரீஅகத்தீஸ்வரர் குடிகொண்டுள்ள இவ்வாலயம் சூர்யன் பரிகார ஸ்தலமாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

விளங்குகின்றது. 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இவ்வாலயத்தில் சூரியன், பைரவர் சிவபெருமான் ஒரேஇடத்தில் நின்று தரிசனம் செய்ய பன்னிரெண்டு துவாரங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றது.. நவக்கிரஹத்தை குறிக்கக்கூடிய ஒன்பது துவாரங்களுடன் சேர்ந்து இச்சாசக்தி ஞானசக்தி, கிரியாசக்தி இந்த துவாரங்கள் வழியாக சுவாமி தரிசனம் செய்யும்போது சகல தோஷங்களும் நிவர்த்தி ஆகும் என கூறுகின்றார்கள். திருக்கோயில் அமைந்துள்ள ஊர்; கௌப்பக்கம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy, Vidya Pandit V Hariharan Collection, Sholinganallur, Chennai

போரூர் குன்றத்தூர் சாலையின் மத்தியில் கெருகம்பாக்கம் பஸ்நிலையத்திலிருந்து வடகிழக்கு பாகத்தில் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனுக்கு சிகப்புவஸ்திரம், சிகப்பு மலர் கொண்டு, எருக்கஇலை, கோதுமை தானியம் கொண்டு வழிபட்டால் வேண்டுவோர்க்கு வேண்டும் அருளை தருகின்றார்.

வழிபட்டவர்கள்: சூரியன், அகஸ்தியமாமுனிகள், வஸிஷ்ட முனிவர் வழிபட்டதாக கூறப்படுகின்றது.

ஊரின் பெயர்: கொளப்பாக்கம் என்றும் சிவபாத சேகர நல்லூர்.

இறைவன் : ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் என்கிற வாகீஸ மஹாதேவர்,

வழிபட்ட மன்னர்கள்: ஆதித்யமன்னர் (கி.பி. 878)

இரண்டாம் ராஜராஜசோழன் (கி.பி. 1152) வீரராஜேந்திரன் விஜயகண்ட கோபாலன் (தெலுங்கு சோழன்) முதலாம் ராஜராஜசோழன் மற்றும் சிற்றரசர்கள்.

Vaidhyanathan Siva Shankar, Chennai

விசேஷ சன்னதிகள்: கிழக்கு நோக்கி விசாலாட்சி உடனுறை ஸ்ரீ விஸ்வ வாதாபி கணபதிபோல் அருள்காட்சி நல்கும் நாதர் ஸ்ரீ ராஜகணபதி. வடக்கு பார்த்த முருகன் விசேஷமானது.

காலபைரவர்: காலபைரவருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் ராகுகாலத்தில் மாலை 4.30 மணிக்குமேல் 6.00 மணிவரை அபிஷேக ஆராதனைகளும் ஏழு வாரங்கள் வழிபட்டால் வேண்டுவதை கிடைக்கவும் நற்பலன்களையும் அருள் பாலித்து வருகின்றார். ஞாயிற்றுக்கிழமைகளில் பைரவர் உற்சவருடன் எட்டுதிக்குகளுக்கும் காட்சிதருகிறார்.

ஆலய தரிசனம் நேரம்: காலை 7.30 முதல் 9.00 மணிவரை, மாலை 6.00 முதல் 8.00 மணிவரை.

சிலமாய் வாழச் சீரருள் புரியம் ஞாலம் புகழும்
ஞாயிறே போற்றி சூரியா போற்றி
சுதந்திர போற்றி வீரியா போற்றி
வினைகள் களைவாய்.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சூரிய ஓரையில் ஒரு நெய்தீபம் ஏற்றி வணங்கினால் நன்மைகள் பல பெறலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

சூரிய ஓரை

Vaidikar Pandit Sri V. Hariharan Collection, Thiruvinganallur, Chennai

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	6 – 7	1 – 2	8 – 9
திங்கள்	10 – 11	5 – 6	–
செவ்வாய்	7 – 8	2 – 3	–
புதன்	11 – 12	–	6 – 7
வியாழன்	8 – 9	3 – 4	–
வெள்ளி	–	12 – 1	7 – 8
சனி	9 – 10	4 – 5	–

தொடர்புக்கு: 044-24780436/ 9443107809

2. சந்திர பகவான்

(சோமாங்கலம்)

அருள்மிகு காமாட்சியம்மன உடனுறை சோமநாத ஈசுவரர் திருக்கோயில்

சந்திரன் பேரழகோடு பூலோகத்தை வலம் வந்தான். பூலோகத்தின் மீது மெதுவாய் பாய்ந்து, தன் அமுதமான கிரணங்களை தவழ விட்டான். உயிர்கள் குளுமையாயின. சந்திரன் மனிதர்களின் மனத்தின் மீது தன் பார்வையை பதித்தான். அவன் கிரணங்களுக்கேற்ப மனம் கூடி, குறைந்து வெவ்வேறு விதமாய் விகசித்தது. அதனால், மனோகாரகன் என்று ஜோதிடத்தில் தனி இடம் பிடித்தான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

அப்படியே வானுலகையும் வளைத்துப் பிடித்தான். தட்சனின் இருபத்தேழு பெண்களும் வானுலகில் வண்ணமயமான நட்சத்திரங்களாய் ஒளிர்ந்தார்கள். மொத்த உலக உயிர்களின் மீதும் தம் பார்வையை பதித்தார்கள். அதே நேரம் சந்திரனையும் ஓர் பார்வை பார்த்தார்கள். அவன் மெல்ல மலர ஆரம்பித்தவுடன் வானுலகமே விழாக்கோலம் பூண்டது. எல்லா நட்சத்திரங்களும் முகம் திருப்பி அந்த பிரகாச மழையில் நனைந்தன. அந்த அழகில் தங்களை இழந்தன.

சந்திரனின் வருகைக்காக காத்திருந்தார்கள் அவனைப் பார்த்து முகம் மலர்ந்தார்கள். விடியலில் அவன் விடுவித்துக் கொண்டபோது வெம்மையானார்கள். சந்திரனை திருமணம் செய்து கொள்ள தவமிருந்தார்கள்.

அதைக்கண்ட தட்சன் திருமணம் குறித்து சந்திரனிடம் கேட்க, அவன் சரி என்றான். தட்சன் இருபத்தேழு (27) பெண்களையும் அவனுக்கே திருமணம் செய்து கொடுத்தான். குறையிலாது பார்த்துக்கொள் என்றான். ஆனால், சந்திரன் ரோகிணியை மட்டும் குளுமையாய் பார்த்தான். அதனால், மற்றவர்களை குறையோடு நோக்கினான். தொலைவிலேயே நிற்க வைத்தான். அதனால் அவர்கள் குன்றிப்போனார்கள். தந்தையிடம் குறைகளை கொட்டித்தீர்த்தார்கள். தட்சன் விஷயம் கேட்டு குமுறிப் போனான்.

உன் அழகு குறித்து உனக்கு இவ்வளவு கர்வமா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

அப்படிப்பட்ட "உன் அழகு குலையட்டும்" என்று கடுமையாய் சபித்தான். இதனால் கோபம் கொண்ட சந்திரனை நிலவுகுலையச் செய்தது. சந்திரன் எனும் சோமன் தன் அழகை இழந்தான். தன் ஒளி மங்கி கருமையாய் தேய ஆரம்பித்தான். தான் செய்த தவறுக்காக மனதிற்குள் வருந்தினான். தட்சனின் பாதம் பணிந்தான். "தொண்டை மண்டலத்தில் சுயம்புவாய் நிற்கும் சிவனை நோக்கி தவம் செய்து வா! ஒருவேளை இந்த சாபம் தீரலாம்" என்றான்.

அப்படியே சிவனை பூஜித்தான், சந்திரன். சிவனும் காட்சி தந்தார். தட்சன் சாபம் இட்டது இட்டதுதான். ஆகவே, நீ முற்றிலும் தேயாது, தேய்வதும் மறைவதுமாக ஒரு வட்ட சுழற்சியில் வா! அதுவும் உலக உயிர்களுக்கு நன்மை புரியட்டும் என்று அருளினார். சந்திரன் சந்தோஷப்பட்டான். தன் வாழ்க்கையின் ஒரு பாகத்தை ஈசனுக்கும், மறுபாகத்தை உலகுக்குமாய் பொழிந்தான்.

அப்படி சந்திரன் பூஜித்து சாபநிவர்த்தி பெற்ற தலமே சோமங்கலம். அதனாலேயே இங்குள்ள ஈசனுக்கு சோமநாதர் என்று பெயர். அம்பிகை, காமாட்சி எனும் நாமத்தோடு காட்சியருள்கிறார். சந்திரன் இங்கு தனிச் சந்நதியில் அருள்பாலிக்கிறார். நவக்கிரக ஸ்தலங்களில் சந்திரனுக்கு உரிய தலமாக விளங்குகிறது. இது சிறிய அழகான கோயில்.

குலோத்துங்க சோழன் கஜபிருஷ்ட விமான அமைப்போடு அமைத்த அற்புதமான கோயில் இது. நான்கு

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

Vaidika Pandit Sri.V.Hariharan Collection. Shivaganga Dist.

வேதங்களையும் ஓதிய அந்தணர்களுக்கு இறையிலியாக இவ்வூர் வழங்கப்பட்டதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கோயிலிலுள்ள சிலைகள் மிகவும் எழில் வாய்ந்தவை சோழர்களின் கைவண்ணத்தில் அழகு பிரதிபலிக்கின்றது. நந்திகேஸ்வரர் ஈசனுக்கு நேராக இல்லாது எதிர்புறமாய் திரும்பியிருக்கிறார். ஏனெனில் அவ்வூர் மீது திடீரென்று எதிரிகள் படையெடுத்து வந்தபோது பயங்கரமாக இவர் படையைப் பார்த்துச் சீற, படை பின்வாங்கியதாம். அப்பொழுது திரும்பிய நந்தி, இன்றும் அப்படியே உள்ளது.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த திவ்விய தேஜோ சொருபியாய் விளங்கும் சிவபெருமான் ஆன்மாக்களிடம் கொண்ட பெருங்கருணையினால் ஜீவாத்மாக்கள் உய்யும் பொருட்டும், தம்மை வழிபடும் மெய்யன்பர்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டும், ஆங்காங்கு திருக்கோயில் கொண்டு அருள்பாலித்து வருகிறார். நமது புண்ணிய பாரத தேசத்தில், தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து குன்றத்தூர் வழியாக 36வது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோமங்கலம் என்னும் திருத்தலத்திலே அருள்தரும் காமாக்ஷி அம்மன் உடனுறை அருள்மிகு சோமநாத ஈஸ்வரப் பெருமான் வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களையும் செல்வங்களையும், வாரி வழங்கும் வள்ளலாக அருள் பாலிக்கின்றார். மேலும், பழமை வாய்ந்த இக்கோயில் முதலாம் குலோத்துங்கனின் மூன்றாவது ஆட்சியாண்டில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. V. Subramaniya Sastrigal Trust, Chennai

(கி.பி. 1073) ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாணூர் நாட்டுச் சோமங்கலமான ராஜசிகமாணிச் சதுர்வேதிமங்கலம் என்று இவ்வூர் அழைக்கப்பெற்றுள்ளது. கி.பி. 1206-ல் சோமங்கலம் இராஜசிகாமணி சதுர்வேதி மங்கலம் என்று அழைத்தனர் இராஜராஜன் ஆட்சியிலும் கி.பி.1174 இதே பெயரில் இவ்வூர் வழங்கப் பெற்றுள்ளது. இவ்வாறு, பல அரசர்கள் ஆட்சியிலும், சதுர்வேதிமங்கலம் என்று கூறப்பட்டுள்ளதால் நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் ஓதிய பிராமணர்களுக்கு இவ்வூர் இறையிலியாக (வரியில்லாமல்) அரசர்களால் கொடுக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

. சோமங்கலம் என்ற சொல்லுக்கு சேமங்கலம், ஆஸ்தி, நீதி என்ற பொருள்கள் உண்டு. இவ்வளம் மிகுந்த இவ்வூரின் மாபெரும் நிதியாக சோமீசுரர் கோயில் அன்று விளங்கின. இன்றும் விளங்குகின்றன.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் ஏரி உடைப்பும், பழுதுபார்ப்பு பற்றியும், ஆலயத்தில் சந்தி விளக்கு வைக்க பசுதானம் பற்றியும், பல வரலாற்று செய்திகள் உள்ளன.

சோமன் (எ) சந்திரன் தட்சனின் சாபத்தால் 16 கலைகளும் இழந்து க்ஷயரோகமுற்று, இந்த திருத்தலத்தில் உள்ள இறைவனை நோக்கி பெரும்தவம் புரிந்து சிவபெருமான் அருளால் தட்சனின் சாபம் நீங்கி, முழு

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V. Hariharan Collection. Digitized by eGangotri

சந்திரனாக உருப்பெற்றதினால் இறைவனின் திருப்பெயர் சோமநாத ஈசுவரர் என்று வழங்கப்படுகிறது. இறைவியின் திருப்பெயர் காமாக்ஷி அம்மன் லலிதா ஸகஸ்ர நாமங்களில் அன்னையின் அழகின் சிறப்புகளின் சொல்லுக்கேற்ப அழகே வடிவமாய் காட்சி அளிக்கிறாள். சந்திரனால் ஏற்படுத்திய தீர்த்தம் சோமதீர்த்தம் என்றும் தலவிருட்சம் சரக்கொன்றை மரமாகவும் விளங்குகிறது.

சோமகாந்தன் என்னும் அரசன் தன் நாட்டில் 108 கஜபிருஷ்ட சிவாலயம் அமைத்து குடமுழுக்கு செய்ய விரும்பி திருப்பணிகள் செய்து வந்தான். இத்தலத்தில் திருப்பணிகள் நடைபெறும்போது வேற்றுநாட்டு அரசன் போர் செய்ய வரும் போது படைவீரர்கள் ஆலய பணியில் ஈடுபட்டு இருப்பதால் அரசனால் எதிர்த்து போர் செய்ய முடியாமல் சோமநாத ஈசுவரரிடம் மன வேதனையுற்று, வேண்டும் போது இறைவன் மனமகிழ்ந்து நந்தி தேவரை அழைத்து அப்படைகளை விரட்டி. மேலும், எந்த இடையூறும் வராதிருக்க கிழக்கு நோக்கியே இருப்பாயாக என்று ஆணையிட்டதால் நந்திதேவர் இறைவனை நோக்காத, கிழக்கு நோக்கி இருப்பது ஆலய சிறப்பு. மேலும், இங்குள்ள நடராஜப் பெருமான் சதுர தாண்டவ மூர்த்தியாக இருப்பது வேறெங்கும் காணமுடியாது. கலை நயத்துடன் உள்ள இறைவனின் திருமேனிகள் அனைத்தும் சிறப்பு வாய்ந்தவை.

இத்தகைய சிறப்புக்களை பெற்ற இவ்வாலயம் பல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

ஆண்டுகள் சிதிலமடைந்து இருந்ததை ஆலயம் சுமார் 72 ஆண்டுகளுக்குப் பிறகு இறைபணி மன்றத்தின் முலம் திருப்பணி பொறுப்பினை ஏற்று கிராம மக்கள் மற்றும் சிவநேயச் செல்வர்களாலும் சீரமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவேற்றப் பெற்று நிகழும் மங்களகரமான விய ஆண்டு தை திங்கள் 10ஆம் நள் (24-1-2007) புதன் கிழமை சோமநாத ஈசுவரர், காமாக்ஷி அம்மன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சந்திர பலம் குன்றிய சாதககாரர்கள். இத்தலத்து சோமநாதரையும், சந்திரனையும் வழிபட்டால் குன்றிய பலம் கூடும் என்பது சோதிட நியதி. சென்னை தாம்பரத்திலிருந்தும், குன்றத்துரிலிருந்தும் இக்கோயிலுக்குச் செல்லலாம். இரண்டு ஊர்களிலிருந்தும் பல்லாவரத்திலிருந்தும் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆலய தரிசன நேரம்: காலை 7.00 முதல் 10.30 மணிவரை, மாலை 5.30 முதல் 7.00 மணிவரை.

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி, திருவருள் தருவாய்
சந்திரா போற்றி, சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சந்திர ஓரையில் 2 நெய்தீபம் ஏற்றி வணங்கினால் எல்லாவித நோய்களும் தீரும்.

தொடர்புக்கு: 044-24780124/9443107809
/9677155245

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

சந்திர ஓரை

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	9 – 10	4 – 5	–
திங்கள்	6 – 7	1 – 2	8 – 9
செவ்வாய்	10 – 11	5 – 6	–
புதன்	7 – 8	2 – 3	–
வியாழன்	11 – 12	–	6 – 7
வெள்ளி	8 – 9	3 – 4	–
சனி	–	12 – 1	7 – 8

3. குரு பகவான்

(போரூர்)

அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி உடனுறை அருள்மிகு ஸ்ரீ இராமநாத ஈஸ்வரர் திருக்கோயில் குரு ஸ்தலம்

அருள்மிகு ஸ்ரீ இராமநாத சுவாமி சரிதம்:

தேவலோகத்தில் (கைலாயித்தில்) பரமேஸ்வரனுடைய திருவிளையாடலினால், சிவனுக்கும் சக்திக்கும் ஏற்பட்ட போட்டி நடனத்தில் தோல்வி அடைந்த சக்தி சினம் கொண்டு 9 கங்கை துளிகளாக ஆழ்கடலில் அமிழ்ந்துவிட, அதனைச் சுற்றி 21 துளிகளாக சிவன்தரிசனம் சக்திக்கு கொடுக்க அதில் ஒரு இடமே கைலாயகிரிபுரம். (இன்றைய இராமேஸ்வரம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

இதில், சமாதானம் அடையாத சக்தி அண்ணன் மஹா விஷ்ணுவிடம் 3 வரம் கேட்க, அதில் மூன்றாவது வரமே காளிரூபத்தோடு சிவனை அடக்கி ஆளவேண்டும், பின்னர் சிவனை திருமணம் செய்துகொள்ள வேண்டும். என கோரி சிவனை அடைய சக்தி முற்பட்டப்போது, சிவன் காஞ்சிபுரத்தில் இருப்பது தெரியவந்து சக்தி செல்கையில், விஷ்ணு சிவனை காஞ்சிபுரம் முழுவதும் லிங்கமாக காட்சி அளிக்க சொல்லி, அதில், உண்மையான சிவன் யார் என்று தெரியாமல் சக்தி திணற, மீண்டும், விஷ்ணு சிவனை காஞ்சிபுரத்தைவிட்டு (மாங்காடு, போரூர், திருவேற்காடு, திருமுல்லைவாயில், மேனூர், கோவூர், திருநாகேஸ்வரம், சௌகார்பேட்டை, திருவொற்றியூர்) ஆகிய இடங்களில் வாசம் செய்ய சொல்லிவிட்டு அத்திவரத பெருமானாக கங்கையில் அமர்ந்து விடுகிறார். பல கோணங்களில் சக்திக்கு திருமணம் செய்து வைப்பதாக கூறி ஏமாற்றி வருகிறார்.

இதனால் சினம் கொண்ட சக்தி "அண்ணனுக்கு தான் கணவரை பிரிந்து வாடுவதுபோல், தன் அண்ணன் விஷ்ணுவும் இராமராக அவதாரம் எடுத்து மனைவியாகிய சீதையை பிரிந்து துன்புற வேண்டுமென்றும்", பின்னர், சிவனை வழிபட்டு சீதையை மீட்க வேண்டுமென்றும் சாபம் கொடுக்கிறார்.

இச்சாபத்தின்படி சீதையைத் தேடிவந்த இராமர் இலுப்பைக்காடு சுற்றுத்த போரூரில் வெல்லி மரத்தடியில்

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

அமர்ந்தார். ஞான திருஷ்டியால் பூமிக்கடியில் லிங்கம் இருப்பதையும், அதன் சிரசில் தன் காலடி தோஷம் பெற்றதையும் உணர்ந்து, தோஷம் நீங்கிய லிங்கத்தை வெளிக்கொண்டுவர நெல்லிக்கனி உண்டு, ஒரு மண்டலம் (48 நாட்கள்) தவம் செய்தார். அத்தவத்தால் மகிழ்ந்த சிவன் பூமியை பிளந்து கொண்டு விஷ்வரூப தரிசனம் தந்து, பின்னர் இராமர் அச்சிவனை கட்டி அணைத்து அமிர்தலிங்கமாக மாற்றி "இராமநாத ஈசுவரர்" என பெயர் சூட்டி, சிவனிடம் சீதை இருக்கும் இடம் அறிந்து, இங்கிருந்து போருக்கு சென்றதால் தற்காலத்தில் "போரூர்" எனும் பெயர் பெற்று விளங்குகிறது.

Vaidika Pandit Sri.V.Hariharan Collection, Saligramam, Chennai

சிவனை குருவாக ஏற்று இங்கிருந்து இராமேசுவரம் சென்றதால் முந்தைய காலத்தில் இந்த ஊர் "உத்திர இராமேசுவரம்" என பெயர் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

இராமருக்கு குருவாக விளங்கிய காரணத்தால், இங்குள்ள சிவன், விஷ்ணு அம்சம் உள்ளவராக இருப்பதினாலும். சிவனும் விஷ்ணுவும் சேர்ந்த சிவனாக காட்சி அளிக்கிறார்.

அதனால்தான், இத்திருக்கோவிலில் சிவனுக்கு பிரசாதமாக விபூதி-குங்குமம், விஷ்ணுக்கு பிரசாதமாக தீர்த்தம்-ஜடாரி சேவை கொடுக்கப்படுகிறது. இராமருக்கு குருவாக சிவன் விளங்கிய காரணத்தால் இப்புனித திருத்தலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

குரு-தட்சிணாமூர்த்தி ஸ்தலமாக விளங்குகிறது. குரு தட்சணா மூர்த்திக்கு செய்யவேண்டிய பூஜை அனைத்தும் சிவனுக்கே நடைபெறுகிறது. மூர்த்திகரமான அருள்மிகு ஸ்ரீ இராமநாத ஈஸ்வரரை வழிபட்டால் குருவின் தோசங்கள் நீங்கி, உங்கள் வாழ்வில் நடைபெற வேண்டிய அனைத்து நல்ல சுபநிகழ்ச்சி நடக்கும் என்பது உண்மை. மேலும், வேண்டுதலுக்கு ஏற்ப, பக்தர்கள் தாங்கள் ஒரு மண்டலம் (48 நாட்கள்) விரதமிருந்து வழிபட நன்மையே உண்டாகும். இவ்வாலயத்தில் காளிரூபத்தோடு சக்தி சினங்கொண்டு வடக்குதிசை நோக்கி இருந்ததாகவும், பின்னர் விஷ்ணு சக்தியை சாந்தமடையச் செய்து, பின் தெற்கு நோக்கி "சிவகாம சுந்தரி"யாக காட்சி அளிக்கிறார் (காளிகோயில் அருகாமையில் உள்ளது). மேலும், இங்கு ஸ்தல விருட்சமாக விளங்கும் நெல்லிக்கனி மிகவும் விஷேமான ஒன்று.

காசிக்கும் செல்பவர்கள் - இராமேசவரம் சென்று பின் காசிக்கு செல்ல வேண்டும். மீண்டும் இராமேசுவரம் சென்றால்தான் - காசிக்கு சென்ற பலன் உண்டு என்று கூறுவார்கள்.

அதேபோல் உத்திர இராமேசுவரமாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீ இராமாநாத ஈஸ்வரரை வழிபட்டு காசி சென்று பின் திரும்பி இவரை வந்து வழிபட்டதின் மூலமாக காசி சென்ற முழுபலன் உண்டு என்பதும், இராமேசுவரத்திற்கு இணையான ஸ்தலம் என்பதும் உண்மை. இங்குள்ள

Vaidika Pandit Sri V Hariharan Collection. Digitized by Siddhanta eGangotri Gyaan
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

"ஸ்ரீ இராமநாத ஈசுவரர்" சுயம்புவாக உள்ள பிரமாண்டமான காட்சியைக்காண கண்கோடி வேண்டும். 800 ஆண்டுகள் பழமையான கோயில் என புராணம் கூறுகிறது. 7 (வியாழக்கிழமை) வாரம் கொண்டை கடலை, தயிர்சாதம், நெய்வைத்தியம் செய்தால் தங்கள் பிராத்தனை நிறைவுபெறும். சென்னை போரூரில் 18.கி.மீ அமைந்துள்ளது. குன்றத்தூரிலிருந்து 5 கி.மீ உள்ளது. ஆலய தரிசன நேரம்: காலை 6.00 முதல் 11.30 மணிவரை, மாலை 5.00 முதல் 8.30 மணிவரை.

CC-0. Muthulakshmi Research Academy Collection, Sholinganallur, Chennai

குணமிகு வியாழ குரு பகவானே
மனமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்
ப்ருகஸ்பதி வியாழப் பரதகுரு நேசா
க்ரகதோஷ மின்றிக் கடாக்ஷிந் தருள்வாய்.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் குரு ஓரையில் 3 நெய்தீபம் ஏற்றி காசி - ராமேசுவரம் சென்று வணங்கிய பலனை அடையலாம்.

தொடர்புக்கு: 044-24829955

குரு ஓரை

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	11–12	–	6 – 7
திங்கள்	8 – 9	3 – 4	–
செவ்வாய்	–	12 – 1	7 – 8
புதன்	9 – 10	4 – 5	–
வியாழன்	6 – 7	1 – 2	8 – 9
வெள்ளி	10 – 11	5 – 6	–
சனி	7 – 8	2 – 3	–

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

4. ராகு பகவான்

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(குன்றத்தூர்)

குன்றாப் புகழுடைய குன்றத்தூர் நாகேஸ்வரர் இறைவியின் திருப்பெயர் காமாட்சி அம்மன்

பன்னிரெண்டாம் திருமுறையாம், திருத்தொண்டர் மாக்கதை எனும் பெரிய புராணம் ஈந்த பெருந்தகை சேக்கிழார் இந்த அருட்கவிஞர் ஏற்படுத்திய அற்புதத் திருக்கோயிலே இன்றைய நமது திருநாகேஸ்வரசாமி திருக்கோயில் சுமார் 850 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது இத்திருக்கோயில்.

குன்றத்தூர் : இவ்வூருக்கு தெற்கில் பல குன்றுகள் உள்ளன. எனவே குன்று அடுத்த ஊர் குன்றடுத்தூர் - குன்றத்தூர் ஆகி இருக்கிறது.

சண்பகராண்யம் எனப்படும் திருநாகேச்சரம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தலம் இத்தலத்து இறைவன், தாம் பிறந்த ஊரிலும் அருள்புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் மன்னன் அநாபச் சோழனின் உதவியுடன் சேக்கிழார் பெருமானால் உருவாக்கப்பட்டது இத்திருக்கோயில் வடதிருநாகேஸ்வரம் என்று இத்தலம் அழைக்கப்படுகிறது.

இத்தலத்து இறைவனது திருப்பெயர் நாகேஸ்வரசுவாமி இறைவியின் திருப்பெயர் காமாட்சி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

அம்மன். 300 × 300 அடி 90000 சதுர அடிகள் கொண்டது இத்திருக்கோயில். இந்த ஆலயத்தின் முன் சூரிய புஷ்கரணி என்றழைக்கப்படும் திருக்குளம் ஒன்று உள்ளது.

Vaidika Pandit Sri V. Hariharan Collection. Digitized by Muthulakshmi Research Academy, Chennai

இந்த ஆலயத்தில் ஸ்தல விருட்சம் செண்பகமரம் ஆகும். இத்திருக்கோயில் கணபதி உச்சிஷ்ட கணபதி, நர்த்தன கணபதி, வலஞ்சுழி கணபதி என்ற பல்வேறு வடிவங்களில் காட்சி தருகிறார்.

இத்திருக்கோயில் உட்பிரகாரத்தில் சத்ய நாராயணரும் காட்சி தருகிறார். மேலும் காளிங்க நர்த்தனர், தட்சிணாமூர்த்தி, மஹா விஷ்ணு போன்ற மூர்த்தங்களையும் கண்டு களிக்கலாம். மற்றும் பிரம்மா, சண்டிகேஸ்வரர், பைரவர், பிச்சாடனர், சனிபகவான், காட்சி தரும் அற்புதக் கோலங்கள்.

இக்கோயிலில் பிரதோஷ பூஜை, பௌர்ணமி பூஜை, கிருத்திகை வழிபாடு, முதலியன நிகழ்த்தப் பெறுகின்றன. சித்திரையில் வருடப்பிறப்பு விழாவும் லட்சார்ச்சனைகளும், சித்திரை கிருத்திகை முருப்பெருமான் திருவீதி உலாவும் நடத்தப்படுகின்றன. வைகாசி பூச நட்சத்திர தினத்தை சேக்கிழார் விழாவாக கொண்டாடுகின்றனர். 10 நாட்கள் இந்த திருவிழா நடைபெறும்.

ஆனி மாதத்தில் நடராஜருக்கு திருமஞ்சனம் நடத்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

ஆடி மாதத்தில் காமாட்சி அம்மனுக்கு அபிஷேகமும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

சிறப்பான அர்ச்சனைகளும் நடைபெறுகிறது. திருவிளக்கு பூஜையும் நடைபெறுகிறது. ஆவணியில் விநாயக சதுர்த்தி வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy, Collection: Sholinganallur, Chennai

புரட்டாசியில் அம்மன் சந்நிதியில் நவராத்திரி பூஜைகள் நடைபெறுகின்றன.

ஐப்பசியில் கந்தர் சஷ்டி விழாவும், சூரசம்ஹாரமும் பெரும் விழாவாக கொண்டாடப்படுகின்றன.

மார்கழியில் நடராசப்பெருமானுக்கு அபிஷேகமும், மாணிக்கவாசகர் உற்வசமும் நடைபெறுகிறது. திருவாசகம் வாசிக்கப்படுகின்றது.

தை மாதம் தைப்பூசம் சிறப்பாக கொண்டாடப்படும். தை கிருத்திகை ஸ்ரீ முருகப்பெருமான் திருவீதி உலா நடைபெறுகிறது.

மாசியில் மஹா சிவராத்திரி சிறப்பாக கொண்டாப்படுகிறது. அன்றைய தினம் நாள் முழுவதும் கோயில் திறந்திருக்கும். சூரியன் நாகேஸ்வர சுவாமியை தரிசிக்கும் சிறப்பு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

பங்குனி மாதத்தில் பங்குனி உத்திரம். சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். விநாயகர் அபிஷேகம் மற்றும் ஊர்வலமும் நடைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection. CC-0. Chennai.

சித்திரை மாதம் பிரம்மோற்சவம் பெருவிழா விமரிசையாக நடைபெறும். பதினொரு நாள் நடைபெறும் இவ்விழா கோலாகலமாக நடைபெறுகிறது.

குன்றத்தூர் சுற்றியுள்ள திருக்கோயில் சாவான் கோயில் நாகேசுரசாமி திருக்கோயில் ஒட்டினாற்போல் வலப்புறத்தில் சிறிய கோயில் ஒன்று உள்ளது. இதற்கு சாவான் கோயில் என்று பெயர்.

சிவனடியார் திருக்கூட்டச்சபை பல ஆண்டுகளாக சிவனடியார் திருக்கூட்டம் ஒன்று இயங்கி வருகிறது. திருமுறை வகுப்புகள், சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன.

நால்வர்திருக்கோயில் திருக்கோயிலுக்கு அருகில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் திருக்கோயில் உள்ளது.

தேவி பொன்னி அம்மன் ஆலயம் இந்த அம்மன் பல நூற்றாண்டுகளாக மக்களை காத்து வரும் தெய்வுமாக விளங்குகிறாள்.

திருஊரகப்பெருமாள் கோயில் பல்லவர் காலத்திய திருக்கோயில் போன்று உள்ளது.

அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் சேக்கிழார் காலத்துக்கு முன்பே தோன்றியதாக கருதப்படும் குன்றத்தூர் முருகன் கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருப்போரூரிலிருந்து போர்புரிந்து திருத்தணிகை செல்லும்போது முருகப்பெருமான ஒரு முகூர்த்த நேரம் இம்மலையில் இருந்ததாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இத்தலத்து முருகன் வடக்கு பார்த்த நிலையில் இருப்பது ஒரு சிறப்பு. முருகனடியார்களும், சிவபக்தர்களும் திரளாக வந்து வழிபடும் திருத்தலம் இது. அருள்மிகு கந்தழீசுவரர் திருக்கோயில் குன்றத்தூர் முருகன் திருக்கோயிலுக்கு மிக அருகில் உள்ளது. இத்திருக்கோயில் இறைவன் சந்தழீவரர் இறைவி - நகைமுகவல்லி இப்படி பல சிறப்புகள் உடைய குன்றாப்புகழுடைய குன்றத்தூர் சென்று வழிபட்டு, வளம் பெற்று வாழ்க்கை நலம் அடைந்து இன்புற வேண்டுகிறோம். ஆலய தரிசன நேரம்: காலை 7.00 முதல் 11.00 மணிவரை, மாலை 5.00 முதல் 9.00 மணிவரை.

அரவெனும் ராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆகவருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகு கனியே ரம்மியா போற்றி.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சூரிய ஓரையில் (அல்லது) ராகு காலத்தில் துர்க்கைக்கு நான்கு நெய்தீபம் ஏற்றியும், கீழ்க்கண்ட சூரிய ஓரையில் திருநாகேசு வரருக்கு நெய்தீபம் ஏற்றி ராகு தோச நிவர்த்தி தீர்வு காணலாம்.

போன்: 044 24780436/9443107809

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

சூரிய ஓரை (ராகு)

Vanitha Pandian S & V. Hariharan Collection, Sholinganallur, Chennai

கிழமை	காலை	பகல்	இரவு
ஞாயிறு	6 – 7	1 – 2	8 – 9
திங்கள்	10 – 11	5 – 6	–
செவ்வாய்	7 – 8	2 – 3	–
புதன்	11 – 12	–	6 – 7
வியாழன்	8 – 9	3 – 4	–
வெள்ளி	–	12 – 1	7 – 8
சனி	9 – 10	4 – 5	–

5. புதன் பகவான்

(கோவூர்)

அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறை திருமேனீசுவரர் என்கிற சுந்தரரேசுவரர் திருக்கோயில்

செந்தமிழ் நாட்டின் 1008 சிவாலயங்களின் தொன்மைவாய்ந்ததும், சேக்கிழார் பெருமான் மற்றும் தியாகராசரால் பாடல் பெற்றதுமான சிறப்பினை கொண்டது கோவூர் எனும் திருத்தலமாகும். போரூரில் இருந்து குன்றத்தூர் செல்லும் வழியில் 5வது கிலோமீட்டரில் அழகுற அமைந்த இத்திருத்தலத்தில், சுந்தரசோழனின் காலத்தில் கி.பி. 965ல் இத்திருக்கோவில் கட்டப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection. Shivagangai

தெய்வ தியாகராசர் இத்தல இறைவன் மீது கோவூர் பஞ்சரத்னம் பாடி சிறப்பித்துள்ளார். பெரிய புராணத்தின் முதலடியை "உலகெலாம்" என இத்தலத்தில் சேக்கிழாருக்கு இறைவன் அருளியதாக புராணம் கூறுகிறது. தேவேந்திரனின் ஐராவதம் என்ற யானை அகழ்ந்து குளமாக்கி நீராடிய ஐராவத தீர்த்தம் சிவகங்கை என்ற பெயருடன் திருக்குளமாக கோயில் முன்புறம் உள்ளது.

கைலாயத்துக்கு ஒப்பான இத்தலத்தின் தலவிருட்சமாக விளங்கும் மகாவில்வம் 9, 16, 27 இலைகளை கொண்டது. 9 இலைகள் உள்ள வில்வம் பூஜைக்கு தினமும் உபயோகிக்கப்படுகிறது. கருவறை விமானம் தூங்கானை மாடமாகும். சென்னையை சுற்றியுள்ள நவகிரக தலங்களில் புதன் தலமாக உள்ளது.

இத்தனை சிறப்புடைய இத்திருத்தலத்தின் திருப்பணிகள் நிறைவுற முடிக்கப்பெற்று நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2039, ஆவணி திங்கள் 16ஆம் நாள் (01-09-2008) திங்கட்கிழமை அன்று நிறைவு பெற்றது. கல்விக்கு தலமாக இருப்பதால், சௌந்நாம்பிகை உடனுறை திருமேனீஸ்வரர் எனவழங்கும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

ஸ்தலம், தீர்த்தம், விருட்சம் மூன்று பெருமைகளையும் உடையது. ஸ்தலம் மும்மூர்த்திகளில் தியாக பிரும்மம் பாடல்பெற்ற திருத்தலம் கோவூர் "பஞ்சரத்னம்".

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

தீர்த்தம் : "ஜராவததீர்த்தம்".
விருட்சம் : மகாவில்வம்.
Vaidika Research Dharan Collection, Sholinganallur, Chennai
ஒன்பது இலை, பதினாறு இலை, இருபத்துஏழு இலை உள்ள வில்வம் கிடைத்தால் மறு ஜென்மக் கிடையாது என்று அகஸ்திய நாடி ஜோதிடத்தில் கூறபட்டுள்ள வில்வம். இவ்வாலய ஸ்தலத்தில் 9 நவக்கிரஹம், 16 திதி, 27 நட்சத்திரம். இறந்தவர்களுக்குரியது திதி, பிறந்தவர்களுக்கு உரியது நட்சத்திரம், எந்த நேரம் இருந்தாலும் இந்த வில்வத்தினால் பூஜை செய்தால் நிவர்த்தி ஆவதாக ஐதீகம். நிவர்த்தி ஆவதால் மகாலட்சுமி அம்சமான புதனுக்கு அதிபதியான ஸ்தலம் என்று கூறுப்படுகின்றது.

சிறப்பு - இவ்வாலயம் மும்மூர்த்திகளில் ஒருவரான "தியாகப்பிரும்ம"த்தினால் பஞ்சரத்தினம் பாடப்பெற்ற ஸ்தலம் ஆகும். அப்பர்வைப்பு ஸ்தலமாக "கோவூர் கோட்டூர் குடமூழுக்கு கோயம்பம்" என்று பாடியுள்ளார்.

கோபுரவாசலின் எதிரே நேத்திரவினாயகர் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். அதன்பின்னர் நிருதி மூலையில் வரசித்திவினாயகர் அருள்பாவிக்கின்றார். வாயு முலையில் முருகனும் அவரை தரிசித்து வலம்வரும் பொழுது கொடிமரம், பலிபீடம், நந்திகேஸ்வரரை வணங்கி ஆலயத்தின் உட்பிரகாரத்தின் சூரியன். அடுத்து நால்வர் காளிகாம்பாள் வீரபத்திரர் தரிசனம் செய்து நின்றாள். நுவாரபாலகரை வணங்கி திருமேனிஸ் எனும் "சுந்தரேஸ்வரர்" புதனுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதிபதிவார் அருள் பாலிக்கின்றார். அடுத்து பிரகாரத்தில் சேஷ்ட விநாயகர், தட்சணாமூர்த்தி, பிரதான விநாயகர், சோமாஸ்கந்தர், சுக்கிரவார அம்மன், சந்திரசேக லிங்கோத்பவர், கருணாகரப் பெருமாள் உற்சவர், முருகன் வள்ளிதெய்வானை, உற்சவர் முருகன், ஆறுபத்திமூவர், பிரம்மா, சண்டிகேஸ்வரர், துர்கை, பள்ளியறை தரிசனம் செய்து அம்பாள் கேஷ்டம், வாராஹி, வைஷ்ணவி, மஹாலஷ்மி, பிராம்மனி, துர்கி சண்டேஸ்வரி, பைரவர், நடராஜர், சேக்கிழார் ஆகிய மூர்த்திகளை தரிசனம் செய்து மூலஸ்தான அம்பாள் சௌந்ராம்பிகை தரிசனம் செய்து வெளியே வந்தால் அக்னிமூலையில் தனி சனிபகவான் நவக்கிரஹம் முதலியவைகளை தரிசிக்கமுடிகிறது.

திருத்தல சிறப்பு

இந்த கோயில் 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

அமைவிடம் : செந்தமிழ்நாட்டின் 1008 சிவாலயங்களில் தொன்மை வாய்ந்ததும், சேக்கிழார் பெருமான் மற்றும் தெய்வ தியாகராசரால் பாடல் பெற்றதுமான சிறப்பினை உடைய திருத்தலமாகும். போரூரில் இருந்து குன்றத்தூர் செல்லும் சாலையில் 5வது கி.மீ. தூரத்தில் இத்தலம் அமைந்துளளது.

மூர்த்தி சிறப்பு: பசுவடிவமான பார்வதி தேவிக்கு சிவபெருமான் தன் சிவலிங்க திருமேனியை காட்டிய இடமாதலால் "திருமேனீச்சுரம்" என்று சிறப்பு பெற்றது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

இத்தலம், தெய்வ தியாகராசர் இத்தல இறைவன் மீது "கோவூர் பஞ்சரத்னம்" பாடி சிறப்பித்துள்ளார். பெரிய புராணம் எழுதுவதற்கு முன "உலகெலாம்" என்ற அடியை சேக்கிழாருக்கு இறைவன் கோவூரில் அருளியதாக புராணம் கூறுகிறது.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலச்சிறப்பு: அன்னை காமாட்சி மாங்காடு தலத்தில் செய்த கடும் தவம் காரணமாக மூவுலகிலும் வெப்பம் தோன்றி, துன்பம் தந்த வேளையில், மகாலட்சுமி காமதேனுவாக இவ்வூரில் தங்கி தேவர்களுக்கு குளிர்நிழல் தந்தமையால் இவ்வூர் கோ+ஊர்=கோவூர் என வழங்கலாயிற்று.

தீர்த்த சிறப்பு: இத்தலத்தின் கிழக்கு பகுதியில் "ஐராவத தீர்த்தம்" சிவ கங்கை என்ற சிறப்பு பெயர்களுடன் திருக்குளம் எழிலுற அமைந்துள்ளது. காட்டு யானையாக திரிந்த இந்திரனின் பட்டத்து யானையான "ஐராவதம்" இத்தீர்த்தத்தினை அகழ்ந்து, குளமாக்கி, நீராடி, இத்தல இறைவனை வழிபட்டு, தனது பழைய நிலையை அடைந்ததை புராணம் கூறுகிறது.

ஸ்தல விருட்சம்: கைலாயத்துக்கு ஒப்பான இத்தலத்தில் ஒன்பது, பதினாறு என இலைகளைக் கொண்டு "மகாவில்வம்" தலவிருட்சமாக விளங்குகிறது. தோஷங்கள் எதுவானாலும் மகா வில்வத்தை கொண்டு பூஜிப்பதால் அவை நிவர்த்தியாவது கண்கூடு, மகாவில்வ பூஜை சர்வ தோஷ நிவர்த்தி என்பது பெரியோர் வாக்கு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

திரு நாமங்கள்:

தல இறைவன் : திருமேனீச்சுவரர் (எ) சந்தரேசுவரர்

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தல இறைவி : சௌந்தராம்பிகை (எ) போகசக்தி

தல தீர்த்தம் : ஐராவத தீர்த்தம் (எ) சிவகங்கை

தல விருட்சம் : மகா வில்வம்

பூஜை காலங்கள் : காமிக ஆகமப்படி இத்திருக்கோயிலில் ஐந்துகால பூஜைகள் விமரிசையாக தினசரி நடைபெறுகிறது.

திருவனந்தல் சேவை	:	காலை 6.00க்குமேல் 6.30க்குள்
காலை சந்தி	:	காலை 8.30க்குமேல் 9.30க்குள்
உச்சி காலம்	:	காலை 11.00க்குமேல் 11.30க்குள்
சாயரட்சை	:	மாலை 6.00க்குமேல் 7.30க்குள்
அர்த்தசாமம்	:	இரவு 8.00க்குமேல் 8.30க்குள்
பள்ளியறை சேவை	:	இரவு 9.00க்குமேல்

நவகிரக தல சிறப்பு : சென்னையை சுற்றி அமைந்துள்ள நவகிரக தலங்களில் இத்தலம் "புதன்" கிரகத்துக்குரிய பரிகார தலமாக திகழ்கிறது. சுற்றுலா கழகம் நடத்தும் நவகிரக சுற்றுலாவில் இத்தலம் சேர்க்கப்பட்டுள்ளது.

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பேர்தந் தாள்வாய் பண்ணெலியானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் புதன் ஓரையில் 5 நெய்தீபம் ஏற்றி கல்வியிலும், நினைவாற்றிலும் புகழ் பெறலாம். போன்:044-24780124, 9677155245

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புதன் ஓரை

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	8 – 9	3 – 4	–
திங்கள்	–	12 – 1	7 – 8
செவ்வாய்	9 – 10	4 – 5	–
புதன்	6 – 7	1 – 2	8 – 9
வியாழன்	10 – 11	5 – 6	–
வெள்ளி	7 – 8	2 – 3	–
சனி	11 – 12	–	6 – 7

6. சுக்ர பகவான்

(மாங்காடு)

ஸ்ரீ வெள்ளீஸ்வரர் திருக்கோயில் அஷ்டபந்தன ரஜதபந்தன திருக்கோயில்

வாமன அவதாரத்தில் மஹாபலி சக்ரவர்த்தி தன்னுடைய யாகம் நிறைவு அடையும் பொருட்டு தானம் கொடுக்கும் தருணத்தில் மஹாவிஷ்ணு தானம் பெறும் பொருட்டு வந்திருந்த சமயத்தில் அசுர குரு சுக்கிராச்சாரியார் அரசரிடம் தானம் பெற வந்திருப்பவர் மஹாவிஷ்ணு என

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

தெரிந்து தானம் கொடுக்க வேண்டாம் என்று கூறுனார். இருப்பினும், குருவின் சொல்லை கேட்காமல் தானம் கொடுக்க
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
முற்படுகிறார். அந்த சமயத்தில் அரசர் தரும் தானத்தை தடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கமண்டலத்தின் துவாரத்தில் வண்டு உருவில் சென்று துவாரத்தை அடைத்து தானத்தை தடை செய்கிறார் அசுர குரு. இதனை அறிந்த மஹாவிஷ்ணு ,(வாமனர்) தர்பை புல்லினால் கமண்டலத்தின் துவாரத்தின் வழியே செலுத்தி வண்டை வெளிக்கொண்டு வருகிறார். இத்தருணத்தில் அசுர சுக்கிராச்சாரியார் ஒரு கண்ணை இழக்கிறார். சுக்கிராச்சாரியரை பூலோகம் சென்று பார்வதி தேவி பஞ்சாக்னியில் தவம் செய்யும் மாங்காடு தலத்திற்கு சென்று சிவனை நோக்கி தவம் செய்ய கூறுகிறார். சுக்கிராச்சாரியாரின் கடுந்தவத்திற்கிறங்கி சிவபெருமான் அவருக்கு இழந்த கண் பார்வையினை மீண்டும் கிடைக்க அனுக்கிரக செய்தருளினார். சுக்கிராச்சாரியாரின் வேண்டுதலின் பேரில் இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு ஸ்ரீ வெள்ளீவரர் என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார். எனவே, இத்திருத்தலம் சுக்ர ஸ்தலமாக விளங்குகிறது.

திருவிளையாடல்கள் பல புரிந்து; அதில் தானும் மகிழ்வுற்று உலகிற்கும் உண்மையைப் பகன்று கொண்டிருக்கும் நாயகனான சிவபெருமான்; தன் சாயகனான சிவபெருமான்; தன் சாயகியுடன், தேவலோகத்தில் குளவிக் கொண்டிருக்கிறார். அப்போது, சூரிய, சந்திரர்களான பித்தனின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Somayaji Collection, Mangalore, Chennai

கண்களை அம்மன் சிறு குழந்தையைப்போல் விளையாட்டாகப் பொத்தினாள். இதனால் எங்கும் இருளில் முழ்கித் திண்டாடியது. இது கண்ட சிவபெருமாள் அன்னையின் மேல் கோபம் கொண்டார்.

கோபத்தின் எதிரொலியாக, அன்னையைப் பூலோகத்திற்குச் செல்லுமாறும், பின்னர் தான்வந்து அங்கு மணப்பதாயும் சொல்கிறார். பதியின் சொல் கேட்டு, அம்மன் பூலோகத்தில் (மாங்காட்டில்) அவதரித்தாள்.

மாங்காட்டில் காமாட்சியாய் வடிவெடுத்த அன்னை; ஈஸ்வரனை வேண்டி பல காலம் காத்திருந்தாள். பலன் ஏதும் இல்லாத காரணத்தாலும் ஐயனைக் காண வேண்டுமே என்றதோர் தாபத்தாலும் ஐந்து குண்டங்களில் அக்னியை வளர்த்து நடுக்குண்டலத்தில் ஒற்றைக்காலில் சிவனைக் காண கடுந்தவம் புரியத் தவக்கோலம் பூண்டாள். இதனால் இவள் தவக் காமாட்சி என்று அழைக்கப்படுகிறாள்.

கடுந்தவம் செய்து கொண்டிருந்த காமாட்சியை அங்கிருந்து கண்ட சிவன், அன்னையின் (காமாட்சி) மேல் கருணை கொண்டு காட்சி தந்து அருள் செய்ய வருகிறார். ஏற்கனவே, பூலோகத்தில் அசுர முனியான சுக்ராச்சாரியார் சிவபூஜை செய்து கொண்டிருக்கவே பூஜைப் பிரியர்யான சிவபெருமான் முனிவருக்கு முதலில் காட்சி தருகிறார். ஆனாலும், தனக்காகத் தவம் செய்யும் காமாட்சியையும் மறக்கவில்லை, பூஜையிலிருந்தும் செல்ல முடியவில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

எனவே, இங்கிருந்தபடியே அம்மனிடம் அசரீரி வாக்குமூலம் அவரை காஞ்சிக்குச் செல்லுமாறும், தான் அங்கு வந்து மணப்பதாயும் கூறுகிறார்.

Vajdika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாங்காட்டில் தவக்கோலத்தில் இருந்த காமாட்சியை ஈஸ்வரன் அடையக் காஞ்சியை நோக்கிச் சென்று அங்கு சிவனை மணலால் லிங்க வடிவில் மாமரத்தடியில் செய்து பூஜிக்கிறார். பூஜை செய்வோர் அனைவருக்கும் அருள் பொழிந்து வரும் சிவபெருமான், அம்மனுக்கு மேலும், அருள் பாவித்து காமாட்சியைப் பங்குனி உத்திரத்திலே மணந்து கொள்கிறார். இதனால் காஞ்சியிலே கல்யாண காமாட்சி என்று ஸ்ரீ காமாக்ஷி அம்மன் அழைக்கப்படுகிறாள்.

காமாட்சி பாதம்: வெளியில் நந்திகேஸ்வரரின் திருமுன்னே ஒரு பெரிய கல்லில் இருபாதங்கள் தெரிவதை காணலாம். ஆதிகாமாட்சி இங்கு நின்றுதான் ஈசனை வணங்கி வழிப்பட்டதாக கூறப்படுகிறது. விவசாய விநாயகரின் சிறப்பு தரிசனமும் செய்யலாம்.

ஆலய தரிசன நேரம்: காலை 6.00 முதல் 1.00 மணிவரை, மாலை 4.30 முதல் 9.00 மணிவரை.

சுக்கிரமூர்த்தி சுபமிக யீவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சுக்ரன் ஓரையில் ஆறு நெய்தீபம் ஏற்றி வைத்து வழிபாடு தொடங்கலாம்.

Vaidika Pathasala Sri V. Parthasarathy Gollapudi Chennai

போன்: 044-26272053, 26495883

சுக்ரன் ஓரை

கிழமை	காலை	மாலை	
ஞாயிறு	7 – 8	2 – 3	–
திங்கள்	11–12	–	6 – 7
செவ்வாய்	8 – 9	3 – 4	–
புதன்	–	12 – 1	7 – 8
வியாழன்	9 – 10	4 – 5	–
வெள்ளி	6 – 7	1 – 2	8 – 9
சனி	10–11	5 – 6	–

7. கேது பகவான்

(கெருகம்பாக்கம்)

அருள்மிகு ஆதிகாமாட்சியம்பாள் சமேத ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் ஆலயம்,
கெருகம்பாக்கம். சென்னை-602 101.

ஊர் இருப்பிடம்: காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செம்பரம்பாக்கம் நீர்பாசனமுடைய செழிப்பான ஊர் சேக்கிழார் அவதாரத்தலமாகிய குன்றத்தூருக்கு கிழக்கே நான்கு கிலோமீட்டர் தொலைவில் போரூருக்குமேற்கே நான்கு கிலோமீட்டர் குன்றத்தூருக்கும் போரூருக்கும் நடுவில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

இருக்கின்றது. ஊர்களின் அருகாமையில் உள்ள ஊ ர் பெயர்கள் தொடர்பொழியாகவும் வழங்கு வது நமது நாட்டில் மிகவும் பழைய காலத்திலிருந்து உருபழக்கம். சீர்காழி, சிதம்பரம் , ஸ்ரீரங்கம், ஜம்புகேஸ்வரம், குன்றத்தூர், கோவூர், கெரு கம்பாக்கம், கொளப்பாக்கம் என்று உள்ளது. கோவூரின் தலை மையிடமாக கொண்டு கோப்பெருஞ்சோழன், கோச்செங்க ான்பாலை காணும் பெயர்களிலும் வழங்கப்படுகிறது. இத ல் இருந்து கோவூர் அரசரின் உறவினர்களான குறுநிலமன்ன ர்கள் வசித்த இடம் என்று அறியலாம். கோவூர் அடுத்துள்ள மாங்காடு சிலாசானங்களில் அவ்வூர் அழகிய சோழநல்லூர் என்று கூறப்படுகின்றது.

கீர்த்திமிக்க இராஜராஜசோழன் தந்தையாகிய சுந்தரசோழன் பெயரால் அவ்வூர் இவ்வாறு அழைக்கப்படுகிறது என்று சரித்திர நிபுணர்கள் கூறுகின்றார்கள். நீர்வளமும், நிலவளமும் பொருந்திய இவ்வூர் குளிர்ச்சி பொருந்திய அடர்ந்த தாழையும், அருகம்பில்லும் நிறைந்த சோலைகளுக்கு இடையே அரச குடும்பத்தினர் மிக விருப்பத்தோடு ஆலயங்கள் அழைத்து வணங்கிய இடம் ; இதனை மன்றமலர் (தாழைமலர் சோலை) "இருகுதமிழ் மணங்குந்தென்மலர் சோலை" சோலையெல்லாம் தென்றாவுங் "நாகம்" தாழைமனம் "செந்நீர்சோலை" என்று இவ்வூரின் குளிர்ச்சி பொருந்திய வளத்தைமிக அழகாக "தினகரன்" என்ற கோவூர்கிழார் சற்றுப்புறத்திலுள்ள ஊர்களின் சிறப்புகளை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

"தினகரவெண்பா"வில் பாடியுள்ளது விளங்குகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த இவ்வாலயம் பல ஆண்டுகளாக இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் தான் கட்டப்பட்டது என்று பலரால் எண்ணப்பட்டுவந்தது. இதனுடைய வரலாறு என்று தேடும்பொழுது தான் இவ்வலாயத்தின் கட்டிட அமைப்பைவைத்து பார்க்கும் பொழுது செங்கல் சுண்ணாம்பு கரையை கொண்டு $1^1/_2$ அடி அகலம் (கணம்) சுவர் அமைப்பைவைத்து பார்க்கும் பொழுது சோழர்கால கட்டிட அமைப்பு என்று உறுதியாக கூறமுடிகின்றது.

Vaidika Pandit Sri V Hariharan Collection. Shivoham

கி.பி. 1008ல் புலியூர் கோட்டத்து மாங்காடு நாட்டுக்கோவூர் சுற்றியுள்ள ஆலயங்களில் வழிபாடு நடத்த நிலம் தானவிவரங்கள் செய்ததாக கூறுகின்றனர். அப்பொழுது இருந்த குறுநிலமன்னர்களால் நிர்வகிக்கப்பட்ட ஆலயம் அருள்மிகு ஆதிகாமாட்சியம்பாள் சமேத திருநீலகண்டேஸ்வரர் ஆலயம் கெருகம்பாக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது அப்படி அமைத்து நிர்வாகிக்கப்பட்ட ஆலயங்களில் கஜபிருஷ்ட கோபுரம் முற்றுபெற்ற ஆலயங்களில் சிலமுற்று பெறாமல் கோபுரம் இல்லாமல் இருக்கின்றன. தென்னாட்டில் இருந்து இராஜராஜசோழன் ஆட்சிகாலத்தில் பல்லவமன்னர்களிடம் வெற்றிகொண்ட. இடத்திலெல்லாம் அவர்கள். பெயர் நிலைக்கவும் பக்தி, கல்வி, ஒழுக்கம், கொடைதிறன் அனைத்து சிறந்து விளக்கவே, ஆலயம் உடன் திருக்குளமும் சிறப்பாக அமைத்து வழிபாடு செய்து வந்துள்ளதை கனவும் அறியவும் முடிகின்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

நீலகண்டேஸ்வரர் பெயர்காரணம்:

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து பாற் கடலை கடையும் பொழுது அதிலிருந்து பல அரிய பொருட்கள் தோன்றின அவைகளில் கௌதும் மணியை பிரம்மா எடுத்துக்கொண்டார், மஹாலட்சுமியை மஹாவிஷ்ணு எடுக்கொண்டார், கல்ப விருட்க்ஷம் அப்ரைஸ் முதலியவைகளை சந்திரன், தேவர்கள் எடுத்துக் கொண்டார்கள். மேலும், சமுத்திரத்தை கடையும் போது விஷம் வெளிப்பட்து. அதனால் எல்லா தேவர்களும் துன்பம் அடைந்தனர். அந்த விஷத்தின் வேகத்தினால் திருமாலின் உருவமே கறுத்துவிட்டது. இந்த சமயத்தில் சிவபெருமான் எல்லா ஜீவராசிகளையும் துன்புறுத்திய விஷத்தை தன்கையில் அடக்கி உட்கொண்டார்.

அந்த சமயத்தில் பார்வதி தேவியார் விஷம் உள்ளே சென்றுவிட்டால் உலகம் அனைத்தும் அழிந்துவிடும் என்று எண்ணி விஷம் உள்ளே இறங்காதவாறு கழுத்தை கெட்டியாக பிடித்து அங்கேயே தடுத்து நிறுத்திவிட்டார். அதனால் கழுத்தில் "குரல்வளை" கண்டம் ஏற்படுகிறது. ஆகையால், சிவபெருமானுக்கு திருநீலகண்டேஸ்வரர் என்ற பெயர் பெற்றார்.

சிறப்புமிக்க ஆதிகாமாட்சி பெயர் காரணம்:

ஆதி என்றால் முதல் என்பது. ஆலகால விஷத்தினை உண்ட சிவபெருமான் நிலைதடுமாறி சாய்ந்தபோது பூமியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

வந்து தாங்கிபிடித்தமையால் அம்மை ஆதி காமாட்சி என்று அழைக்கப்படுகின்றாள். சிவன், நீர், நிலம், காற்று, ஆகாயம், வெட்டவெளி என்று பஞ்சபூதங்களாக உள்ளதுபோல் அம்பாள் ஐந்து வடிவாக உள்ளார்.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. ஆதிகாமாட்சி - கெருகம்பாக்கம்.
2. தபஸ்காமாட்சி - மாங்காடு.
3. காளிகாமாட்சி - காஞ்சிபுரம்.
4. சாந்தசெருப காஞ்சிகாமாட்சியம்மாள்.
5. ஆலிங்கன காமாட்சி ஏகாம்பரநாதர் - திருக்கோயில் காஞ்சிபுரம்.

இங்கு அம்பாள் ஐந்தடி உயரத்துடன் கம்பிரமாக பாசங்குசத்துடன் அபயக்கரங்களையும் நான்கு கைகளுடன் கம்பீரமாக வரும் பக்தர்களுக்கு நோய்பிணி, கஷ்டங்களை தீர்ப்பதுடன் திருமணதடைகளை நீக்கி சுப பலன்களையும், குழந்தை பாக்கியத்தையும் தந்து அருள் பாலித்து வருகின்றாள்.

ஸ்ரீ நாகர்

எல்லா ஆலயங்களிலும் விநாயகர்தான் முதலில் இருக்கும். இங்கு நாகர் தான் முதலில் உள்ளார். கேதுவின் ஸ்தலமாகிய இங்கு திருமணதடைகள் நீங்க, நோய்பிணி அகல நாகருக்கு சிறப்பு செய்து பரிகார ஹோமங்கள் செய்து பலன்களை அடைந்துள்ளதை நாம் காணமுடியும்.

கிரஹ சங்கட விநாயகர் என்ற நாமத்துடன் மஹாகணபதி அருள்பாலித்துவருகின்றார். இவ்வாலயம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பிரதோஷத்தில் முக்கியமானதால் நித்திய பிரதோஷம் செய்யவும், திருப்பணிகள் நடைபெறவும், இறைவனை பிரார்த்திக்கின்றோம். இவ்வாலயத்தில் 110 அடிநீளம், 115 அடி அகலம் மதில்சுவர், மூன்று நிலைமுகப்பு ராஜகோபுரம் சுவாமி விமானம், அம்பாள் விமானம் அனைத்து திருப்பணிகளையும் செய்ய அன்பர்கள் வேண்டப்படுகிறார்கள். இவ்வாலய திருப்பணிகளை செய்து எல்லா வளமும் நலமும் பெற வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆலய விஷேசங்கள்: பிரதோஷம், பட்சப்பிரதோஷம், மாதம் வளர்பிறை, தேய்பிறை பிரதோஷங்கள். தமிழ் புத்தாண்டு - நீறைபனி காட்சி, ஆங்கில புத்தாண்டு - சந்தனகாப்பு, தமிழ் பண்டிகை தினங்களில் சிறப்பு அபிஷேகங்கள் உண்டு.

கேதுப்ரீதி கேது தோஷநிவர்த்தி பூஜைகள் செவ்வாய் கிழமைகளில் செய்யப்படும்.

குறிப்பு :- ஆலயத்தில் திருப்பணிகள் நடைபெற வேண்டியுள்ளதால் ஆலயத்திற்கு அம்மனை கண்டு தரிசித்து தாங்களால் இயன்ற பொருளுதவி திருப்பணிகளை நேரிடியாக செய்யவும், கடிதங்கள் கொடுத்து சிறப்புடன் நடைபெறவும் ஒத்துழைக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கின்றோம்.

சான்றோர்க்கும் சிறப்பளிக்கும் சீர்மிகு அதிகாமாட்சி
உடனுறையும் சங்கரன் திருநீலகண்டெனம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பெருமானை ஊர்மதிசேர் சடையானை நீர்வளமும்
தாரணியும் அகலமும்பில் சூழ்நிற்கும் எம்பெருமான்
CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri
CC-0. Thanjavur R. Mahalingam Collection, Sholinganallur, Chennai
என்மனத்தேவைத்தேனே.

ஆலய தரிசன நேரம்: காலை 9.30 முதல் 11.00 மணிவரை, மாலை 4.30 முதல் 7.00 மணிவரை.

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்கு களின்றி
கேதுத்தேவே கேண்மையாய் ரட்க்ஷி.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சந்திர (கேது) ஓரையில் 7 நெய்தீபம் ஏற்றி பாவவிமோசனம் பெறலாம்.

தொடர்புக்கு:044-24780124/9443107809/
9677155245

சந்திர ஓரை (கேது)

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	9 – 10	4 – 5	–
திங்கள்	6 – 7	1 – 2	8 – 9
செவ்வாய்	10 – 11	5 – 6	–
புதன்	7 – 8	2 – 3	–
வியாழன்	11 – 12	–	6 – 7
வெள்ளி	8 – 9	3 – 4	–
சனி	–	12 – 1	7 – 8

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

8. சனி பகவான்

(பொழிச்சலூர்)

அருள்மிகு ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கேயில்

தமிழகத்தில் ஆயிரக்கணக்கான கோயில்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு புராணம் கூறுகிறது. விதம்விதமான கதைகளை வியந்து வியந்து பேசுகிறது. ஒவ்வொரு கோயிலாக சென்று பார்த்தாலும் ஒரு ஜென்மம் போதுமா? என்பதே சந்தேகம்தான். எத்தனை ஞானிகள்? சித்தர்கள் கால்பட்ட பூமி இது. எவ்வளவு அவதார புருஷர்கள் அவதரித்த ஷேத்திரம்? இங்கு உண்டு. அவர்களின் ஒருநாள் வாழ்க்கையை நம்மால் வாழ்ந்து விடமுடியுமா? அவர்கள் வைராக்கியம் சிந்திதேனும் நம் வாழ்வில் கலக்குமா? இறை என்கிற விஷயத்தின் மீது அவர்கள் கொண்ட பேரன்பிற்கும், காதலாகிக் கனிந்து கண்ணீர் மல்கி தன் உடம்பு பற்றிய நினைவு கூட இல்லாமல் அலைந்து திரிந்து அவர்கள் செய்த பக்திக்கு ஏதேனும் ஈடுஇணைகிடையாது. ஆனால், அவர்கள் நிர்மானித்த கோயில்களும், அடையாளம் காட்டிய தலங்களுமே நம்மிடம் சாட்சியாக நிற்கின்றன.

அகத்தியர் பொதிகை நோக்கி நதியோரமாக பயணப் படும்போது தர்ப்பைப் புற்களை நீரில் இட்டு விடுவாராம். எங்கெல்லாம் ஆகர்ஷணத்தால் அப்புற்கள் ஈர்க்கப்படுகிறதோ

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கெல்லாம் கரை ஒதுங்குமாம். அதை, அவ்விடங்களில் எல்லாம் சுயம்புவாய் உள்ள சிவலிங்கமோ, ஏற்கனவே பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமோ அல்லது இவரே ஒரு லிங்கத்தை நிறுவிவிட்டு நிரந்தரமாய், திடமாய், அடர்த்தியாய் ஒரு சாந்தித்தியத்தை பதித்துவிட்டு தன் தீர்த்த யாத்திரையை தொடர்வார். அப்படி, அவர் நிர்மானித்த கோயில்கள் அகஸ்தீஸ்வரம் என்றும், அவ்விடத்தில் சோழர்கள் கோயில் நிறுவியுள்ளதையும் காணலாம்.

பாரததேசத்தின் முகாந்திரமே கோயில்கள்தான், மகான்களின் பேரருளாலும் அளப்பரிய கருணையினாலும் எங்குமுள்ள பிரபஞ்ச சக்தியை ஓரிடத்தில் பொதித்து காலாகாலத்திற்கும் அது காக்கும் விதத்தை, முறையை, ஓர் கட்டமைப்பை ஸ்தாபித்து அருள் எனும் அட்சய பாத்திரம் சுரக்கும் இடமே கோயில்கள் எனப்படும். கோயில்கள் காலத்திற்குட்பட்டிருக்கலாம். கோயில்களில் உறையும் சக்தி காலதேச வர்த்த மானங்களுக்கு உட்படாதது. காந்தம்போல் தன்னை நாடியவரை பிடித்திழுக்கும் ஈர்ப்பு சக்தி கொண்டது. அண்ட பேரண்டங்களை எது இயக்கிறதோ அதுவே, இங்கு எளிமையாய் அர்ச்சாவதாரரூப்மாய் எழுந்தருளி அனைவரையும் அருள் மழையில் நனைக்கிறது. கோயில்களில் உள்ள தெய்வங்களுக்கு அது அதன் இயல்பாக, சாவகாசமாக பாத்திரம் பார்க்காமல் இட்டு நிரப்புகிறது.

இவர்களில் தமிழ்முனி எனப்படும் அகத்தியருக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெரும் பங்கு உண்டு. தமிழை தேனாக்கி அமுதமாய் ஊட்டியவர். தெய்வத்தையும், தமிழையும் ஒரே கூட்டில் நிறுத்தியவர். இரண்டிலும் கரை கண்டவர். வேத வேதாந்தங்களிலும், புராண இதிகாசங்களிலும் மேதமை கண்டாலும் பிரம்மானந்தத்திலேயே மூழ்கியிருந்தார். சிவபக்தியிலேயே தோய்ந்துக் கிடந்தார். சிவநாமமத்தையே ஓயாது சொன்னார். சிவநாமச்சாரலில் இடையறாது நனைந்தார். அவர் குறுமுனியாக இருந்தாலும் தன்னடத்தே மிகப்பெரிய சக்தியை இறுக்கி வைத்திருந்தார். அதனால்தான் விந்தியத்தை அழுத்த முடிந்தது. சமுத்திரத்தையே விழுங்க முடிந்தது.

அப்படிப்பட்ட சக்தியை இறுக்கி வைத்த ஒரு கோயில் சென்னையை அடுத்த பல்லாவரத்திலிருந்து 4கிலோ மீட்டர் தொலைவில் பொழிச்சலூர் எனும் ஊரில் உள்ளது. இவ்வூர் பூம்பொழிலோடு மலர்ந்திருந்ததால் பொழில் சேரூர் என்றும் வழங்கப்பட்டது. தொண்டைநாட்டு நவக்கிரகத் தலங்களில் சனி பகவானுக்குரிய பரிகாரத் தலமாக இது விளங்குகிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னன் கருவூரை தலைநகராகக் கொண்டு ஆண்ட புகழ்ச் சோழ மன்னனை வெற்றி கொண்டதால் இம்மன்னனும் புகழ்ச்சோழன் என்று பெயர் பெற்றிருக்கிறான். மேலும், இவன் காஞ்சியைக் கைப்பற்றி நிறுவிய பல தலங்களுள் புகழ்ச் சோழநல்லூர் எனும் பொழிச்சலூர் ஒன்றாகும். 1000 வருடங்களுக்கு முற்பட்ட கோயில்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

இப்புராணத் தலத்தில் வேளாளர் ஒருவர் விவசாயம் செய்யும்போது சட்டென்று ஏர் முனையில் ஒரு லிங்கம் தட்டுபட்டது. அச்சிவலிங்கத்தையே அங்கு நிறுவி வழிபட்டு வந்தார்கள். பிறகு பொதிகை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த அகத்தியர் இத்தலத்தின் பெருஞ் சக்தியால் ஈர்க்கப்பட்டு சுயம்புவாய்நின்றஆதிசிவனைபூஜித்துசிலகாலம்அங்கேயேதங்கி வழிபட்டுச் சென்றார். இத்தலத்திற்கு பெரும் ஏற்றத்தை தந்தார்.

சில கோயில்களுக்குள் நுழையும் போதே உடல் சிலிர்த்துப்போகும். மயிர் கூச்செரியும்படியான அதிர்வுகள் நிறைந்து, உடம்பில் ஒருவித உணர்ச்சியை ஏற்படுத்தும். உள் மனதின் கூச்சல் சட்டென்று அடங்கி குவிந்து ஆகாயம்போல் நிர்மலமாய் மாறும். அப்படியொரு சாந்நித்தியமிக்க கோயில்தான் பொழிச்சலூர் அருள்மிகு ஆனந்தவல்லி சமேத அகஸ்தீஸ்வரர் ஆலயம்.

மூலவர் சந்நதி கஜபிருஷ்ட விமான அமைப்பு கொண்டது. அதாவது யானையின் பின்பக்கம் போன்ற தொரு அமைப்பில் கட்டப்பட்டது. கோயில் கருவறை மற்றும் அம்பாளின் மேலேயுள்ள இரு கோபுரங்களும் முற்றிலும் சுதைச் சிற்பங்களினால் அழகுற செதுக்கப்பட்டுள்ளன.

கோயிலின் முகப்பு மண்டப வாயிலிலிருந்து நேராக நோக்கினால் பிரதானமாக அகஸ்தீஸ்வரர் கிழக்கு நோக்கியும், சற்று தள்ளி இடப்பக்கமாக ஆனந்தவல்லி தெற்குப்புறமாக நோக்கியும், தனித்தனி சன்னதிகளைக் கொண்டு அருளாட்சி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy, Vikatan Sri Ramakrishna Collection, Chennai

செய்கிறார்கள். சிவனின் சன்னதியில் சிறிது நேரம் நின்றால் மெல்ல மெல்ல மனம் உள்முகமாகி தியானத்தில் இருப்பது போன்ற அமைதி நம்மைக் ஆட்கொள்கிறது. சித்தபுருஷரின் முன் நிற்பதுபோல் உள்ளுணர்வு ஏற்படுகிறது.

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

அம்பாள் கருமேகம் போன்ற கருங்கல் சிலையில் மின்னல் போன்ற கடைக்கண் பார்வையால் நம்மைப் பார்க்கும் போது நம்மால் சன்னதியை விட்டு நகரவே முடியாத பெரும் சக்தியோடு திகழ்கிறாள். முகத்தில் சிரிப்பு கொப்பளிக்க பக்தர்களை அனுக்கிரகம் செய்ய காத்து நிற்கிறாள். இவ்விரு சன்னதிக்கு முன்பாகவே மற்ற சன்னதிகள் விரவியிருக்கின்றன. பிள்ளையாரும், முருகன் வள்ளி, தெய்வானையுடன் தனிச் சன்னதியில் அருள்பாலிக்கிறார்கள். இவர்களுக்கு எதிரேயே சூரியனுக்கு தனிச்சிலை உள்ளது. அதேபோல வேறொரு பக்கத்தில் பைரவருக்கு தனிச்சிலையும், அதற்கருகிலேயே நவக்கிரகங்களும் உள்ளன. முகப்புமண்டபத்தை தாங்கும் தூண்களில் உள்ள சிற்பங்கள் தனித்தன்மை வாய்ந்தது. ஈசனை மணம் புரிய கால்கட்டை விரலை மட்டும் ஊன்றி பஞ்சாக்னி மத்தியில் கடுந்தவமியற்றும் தபஸ் காமாட்சி, லிங்கத்தின் மீது பாலைப் பொழியும் பசு, பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்களின் சிற்பங்கள் என்று மேலும் அழகு சேர்க்கின்றன.

இக்கோயிலின் இன்னொரு சிறப்பு உற்சவ விக்கிரகங்களே. சோமஸ்கந்தரும், ஆடல்வல்லனுமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

நடராஜர் சிலையுமேயாகும். அதனாலேயே இங்கு ஆருத்ரா தரிசன விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நடராஜர் திருவுலாவாக வந்து பக்தர்களை அருட்கடலில் ஆழ்த்துகிறார். இங்கு நால்வருக்கும் தனித்தனி சிலை மூர்த்திகள் உள்ளன.

சனிஸ்வர பகவானே இங்குள்ள சிவனை பூஜித்து, திருநள்ளார் தீர்த்தத்தில் நிராடியதால் தன் தோஷம் நீங்கப்பெற்று, தனிச் சன்னதியோடு அருள் பாலிக்கிறார். எனவே இவ்வூர் வடதிருநள்ளார் என்று வழங்கப்படுகிறது. சனிப்பெயர்ச்சி விழா மிகச் சிறந்த முறையில் நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கானோர் வந்து தரிசிக்கின்றனர். திருநள்ளாருக்கு செல்ல முடியாதவர்கள் இங்கு வந்து தோஷ நிவர்த்திக்கு பரிகாரம் செய்து மகிழ்வோடு திரும்புகின்றனர்.

கோயில் பிரகாரச்சுற்றாக வலம் வந்தால் தட்சிணாமூர்த்தி சன்னதியும், லிங்கோத்பவருக்கு பதிலாக பெருமாள் சிலையும், சுற்று முடியும் முன்பு விஷ்ணு துர்க்கையும், சண்டிகேஸ்வரரையும் தரிசித்து கொடிமரத்தின் அடியில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தால் மனம் ஆனந்தத்தில் நிரம்பி நிற்கிறது. மாதமிருமுறை பிரதோஷ விழாவும், மஹா சிவராத்திரியும், ஆருத்ராவும், அன்னாபிஷேகமும், சனிப்பெயர்ச்சியும் இக்கோயிலில் சிறப்பாக நடத்தப்படுகிறது.

ஆலய தரிசன நேரம்: காலை 6.00 முதல் 11.30 மணிவரை, மாலை 4.00 முதல் 8.00 மணிவரை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Vignana Kendram Collection, Shenganallur, Chennai

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
எங்களையும் உன்னுடன் சேர்த்து வைத்திருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தாதா.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் சனி ஓரையில் 8 நெய்தீபம் ஏற்றி இன்னல்கள் பல நீங்கி வாழ்க்கையில் வளமோடு வாழ்வோம்.

தொடர்புக்கு:044-32564022/22631410

சனி ஓரை

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	10 – 11	5 – 6	–
திங்கள்	7 – 8	2 – 3	–
செவ்வாய்	11 – 12	–	6 – 7
புதன்	8 – 9	3 – 4	–
வியாழன்	–	12 – 1	7 – 8
வெள்ளி	9 – 10	4 – 5	–
சனி	6 – 7	1 – 2	8 – 9

9. செவ்வாய் பகவான்

(பூந்தமல்லி)

அருள்மிகு வைத்திய நாத சுவாமி
ஆலயக் கல்வெட்டுச் சிறப்புகள்

நகரப்பெயர் : இந்நகருக்குப் புவிருந்தவல்லி என்னும் பெயர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பண்டைக்காலந் தொட்டு வழங்கி வருகின்றது. இப்பெயர் முதலாம் இராஜராஜ தேவர் என்றும் சோழர்குலப் பேரரசர் காலத்திற்கு முன்பே வழக்கிலிருந்ததென்பது. அவரது ஆட்சியில் இருபத்தைந்தாம் ஆண்டில் (கி.பி. 1010) இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டின் இப்பெயர் குறிக்கப்படுவதிலிருந்து அறியப்படுகின்றது.

Vaidika Pandit Sri V. Hariharasarma Collection. Digitized by eGangotri

அச்சோழர் பெருமான் திருமகனாரான இராஜேந்திரன் சோழ தேவர் என்னும் கங்கைக்கொண்ட சோழர் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் (கி.பி. 1022) இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றிலும் பூவிருந்தவல்லி என்னும் இப்பெயர் குறிக்கப்படுகின்றது. இனி இவைமட்டும் இன்றி, கி.பி.1178 முதல் ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்துத் திருப்பூர் கோயில் கல்வெட்டொன்றிலும் பூவிருந்தவல்லி என்னும் இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1178 முதல் ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்துத் திருப்பாசூர் கோயில் கல்வெட்டொன்றிலும் பூவிருந்துங்கள் காலத்துத் திரிசூலம் கோயில் கல்வெட்டொன்றிலும் பூவிருந்தவல்லி என்னும் இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பூவிருந்தவல்லி என்னும் பெயருடன் புகழ்பெற்று விளங்கிய இந்நகரத்திற்கு உலகுய்யக் கொண்ட சோழபுரம் என்றொரு பெயரும் வழங்கப்பட்டமை திரிசூலம் என்னும் ஊரின் கண்ணுள்ள கோயில் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection. CC-0. In Public Domain.

கி.பி. 1178 முதல் ஆட்சிபுரிந்து மூன்றாம் குலோத்துங்களுக்கும் கி.பி. 1216 முதல் ஆட்சிபுரிந்த மூன்றாம் இராஜராஜனுக்கும் உலகுய்யவந்த நாயனார், உலகுய்ய வந்த பெருமாள் என்னும் பெயர்கள் அவர்கள் கல்வெட்டுக்களுள் பயின்றுவருதலின் அவர்கள் இருவரின் ஒருவரால் இந்நகத்திற்கு இப்பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்விருவரில், மூன்றாம் குலோத்துங்கனே, தமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவரின் சேரர், பாணடியர் எனும் ஏனை இருவருடனும், வடநாட்டரசர் பலருடனும், ஈழத்தரசனுடன் பல போர் புரிந்து அவர் தம்மைப் புறங்கண்டு, மதுரையும் பாண்டியன முடித்தலையும் கொண்டருளிய எனவும், மதுரையும், ஈழமும், கருவூரும், பாண்டியன் முடித்தலையும், கொண்டருளிய எனவும், வீராபிடேகம், விஜயாபிடேகம் கொண்ட எனவும் தரிபுவனை வீரதேவன் எனவும் அளப்பரும் வீரப் புகழ்பெறறு விளங்கியவனாகலின் அவன் பெயராலேயே இந்நகருக்கு உலகுய்யக் கொண்ட சோழபுரம் என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென உறுதி கூறலாம்.

சோராஞ்சேரி என்னும் ஊரின்கண்ணுள்ள கல்வெட்டொன்றினும், இந்நகரம் உலகுய்யக் கொண்ட சோழபுரமான பூவிருந்தவல்லி என்று குறிக்கப்பட்டு உள்ளது. அக்கல்வெட்டு, சந்திரகிரியிலிருந்து அரசு புரிந்த சாளுவ நரசிம்ம நாயக்கர் ஆட்சியில் சகாத்தம் 1432ல் (கி.பி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

1509) பொறிக்கப்பட்டதாகலின், இன்றைக்கு ஏறத்தாழ 500 ஆண்டுகட்குமுன் அறியக் கிடக்கின்றது.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெயர்க்காரணம்: பூவிருந்தவல்லி என்பது வெண்தாமரைச் செல்வி. செந்தாமரைச் செல்வி ஆகிய இருவரையும் சிறப்பிப்பதாகும் இங்கே வெண்தாமரைச் செல்வி ஆகிய கலைமகள், இறைவனை வழிபட்ட வரலாறு கூறப்படுகின்றது. அதனால், பூவிருந்தவல்லி என்பது கலைகளுக்காகி பின் அவள் வழிபட்ட இந்நகருக்குப் பெயராயிற்று என்று சொல்லப்படுகின்றது.

சோராஞ்சேரி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டொன்றில் பூவிருந்தவல்லியில் எழுந்தருளியிருக்கும் பரமானுக்குத் தீராத வினைதீர்த்த நாயனார் என்னும் திருநாமம் காணப்படுகின்றது. புள்ளிருக்கு வேளூர் (வைத்தீச்சுவரர் கோயில்) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலும் தீராத வினைதீர்த்த தம்பிரான் என வைத்தியநாதர் குறிக்கப்படுதல் காணலாம். இதுவே பண்டைக்காலத்து வழங்கிய பழம் பெயர் என எண்ண இடமுண்டு. வடமொழியால் எல்லாவற்றையும் புனைந்துரைப்பது சிறப்பெனப் பிறழக்கொண்ட பிற்காலத்தேதான், தீராத வினைதீர்த்த நாயனார் என்பதனை வைத்தியநாதர் என மாற்றி வழங்கி இருக்கவேண்டும். இக்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் கிழ்த்திசையில் உள்ள சாலேகத்தின்மேல் அமைக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டு, சோழர்குலப் பேரரசான முதலாம் இராஜராஜ தேவர் அரியனை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

ஏறிய இருபத்தைந்தாம் ஆண்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அது கி.பி. 1010 ஆம் ஆண்டாதலின், இக்கோயில் இன்றைக்கு ஓராயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாமென்பது நிலைநாட்டப் படுகின்றது. இக் கல்வெட்டின்கண் இவ்வூர் புலியூர் கோட்டத்து, மாங்காடு நாட்டுப் பூவிருந்தவல்லி என்று குறிக்கப்பட்டுள்ளது.

Vaidika Pandit Shiv Hariharan Collection. Digitized by eGangotri

இக்கோயில் உள் பிரகாரத்து வடகிழக்கு மூலையில், அம்பலவாணர் சந்நிதி முன்னுள்ள ஒரு கற்றூணின்கண் உள்ள கல்வெட்டு, பரகேசரிவர்மன் அல்லது இராஜேந்திர சோழ தேவர் என்னும் கங்கை கொண்ட சோழ அரசர் பெருந்தகை, செங்போல் ஒச்சத் தொடங்கிய ஒன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அது கி.பி. 1022 ஆம் ஆண்டாதலின், இக்கல்வெட்டினாலும் இக்கோயில் ஓராயிரம் ஆண்டிற்கு முற்பட்ட பழமை உடையதாம் என்பது அறியப்படுகின்றது. மேற்குறித்த இரண்டு கல்வெட்டுக்களும் தேய்ந்த எழுத்துக்கள் சிதைவுற்றிருத்தலின், அவைகளிலுள்ள செய்திகள் முழுதும் அறிந்துகொள்ளற் கியலவில்லை. இக்கோயில் முதலாம் இராஜராஜ தேவர் காலத்திலேயே புகழ் பெற்றிருந்தமை அறியப்படுதலின், இக்கோயிலும் இக்கோயில் அமைந்துள்ள பூவிருந்தவல்லி என்னும் நகரமும் அவ்வரசர் காலத்திறகு பல நூற்றாண்டுகட்கு முன்னமே நிலைபெற்ற புகழுடன் விளக்கமுற்றிருக்க வேண்டுமென்பது சொல்லாமலே அமையும்.

இக்கோயில் உள்ள பிரகாரத்து வாயிலின் வலப்பக்கம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Chennai and others

சுவரில் உள்ள கல்வெட்டு சகம் 1691ல் (கி.பி. 1770) பொறிக்கப்பட்டது. அதே இடத்தில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டில், குறிக்கப்பட்ட செய்தியே பாட்டு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்கோயில் கல்யாண மண்டபத்தில், வடகிழக்கு மூலைச் சுவரின் உட்பக்கம் உள்ள கல்வெட்டு, சாலிவாகன சகம் 1700ல் (கி.பி. 1778) பொறிக்கப்பட்டிருக்கின்றது.

கி.பி. 1770-ல் வைத்தீச்சுரர் கோயிலுக்குச் சகல திருப்பணிகளும் (சீரணோத்தாரணம்) செய்து, அதனைப் புதுப்பித்து அமைத்தவர், துளுவ வேளாள குலத்தவரும் பூவை நாட்டாரும் ஆகிய சுவாமிநாத முதலியார். அவர் திருமகனார், பூசை. நல்லண்ண முதலியார் ஆவர். இவரே (கி.பி. 1778-ல்) வைத்தீச்சுரர் கோயில் கல்யாண மண்டபம் கட்டி முடித்தவர். இவர் திருமகனார், பூவை சிவபாத முதலியார் ஆவர். இவரே இவ்வைத் தீச்சுரர் கோயில் இராஜகோபுரம் கட்டியவர். இவர் திருமகனார் பூவை. கோடிசூரியப் பிரகாசராய முதலியார் ஆவர். இவர் 1915ல் இக்கோயிலில் சில திருப்பணி புரிந்து பெருங்குட முழுக்கு (மகா கும்பாபிஷேகம்) செய்வித்தனர். பின் 1977ல் இக்கோயிலில் நவக்கோள்களையும் ஸ்தாபித்தனர். (நவக்கிரகப் பிரதிஷ்டை) இவர்தம் புதல்வர்கள் பூவை. சுவாமிநாத முதலியார், பூவை நல்லதம்பி ஐயாசாமி முதலியார் என இருவர்.

சோராஞ்சேரி சிவாலயத்தின் திருக்குளக்கரையில் காணப்படும் ஒரு கல்வெட்டு சந்திரகிரியிலிருந்து அரசு புரிந்து சாளுவ நரசிம்ம நாய்க்கர் ஆட்சியில் சகாத்தம் 1432-ல் (கி.பி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

1519) பொறிக்கப்பட்டிருக்கின்றது. அதன் கண் அச்சோராஞ்சேரி என்னும் ஊர் வைத்தீச்சுரது. பிரம்மா, விஷ்ணு, தர்மபத்தினி, குண்டோதரன், கார்கோடன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றதை வரலாறு மூலம் அறியலாம்.

Vedika Pandit Shiv Nadhan Collection, Shollinganallur, Chennai

சூரிய பூஜை : உலகெலாம் தொழ வந்து எழுகதிப் பரிதி என்று போற்றப்பெறும் சூரிய பகவான் ஆண்டு தோறும் மாசித் திங்கள் 21,22,23,24,25 தேதிகளில் கிழக்குக் கோபுரம் கொடிமரம் நந்தி பத்திரலிங்கம் முகப்பு மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் கடந்து தன் பொன் ஒளியைச் செம்பொற்சோதியாம் அருள்மிகு வைத்தியநாத சுவாமி (சிவலிங்கத் திருமேனி) திருமேனியின் மீது பொழிவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதனையே, இப்பகுதி மக்கள் சூரிய பூசை என்று கொண்டாடுகின்றனர். நவநாயகர்களில் முதன்மை பெற்ற சூரியன் பூசித்த தலம் அருள்மிகு வைத்திய நாத சுவாமி திருக்கோயிலாகும். வாழ்வு ஒளிமயமாக வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வழிபடும் அடியவர்கள் கூட்டமும் ஆலய வளாகத்தில் அலைமோதும் காட்சி ஆண்டவன் அருள் புரியும் நிகழ்வுக்குக் காட்டியம் கூறுவது போல் அமையும் என்பதை நேரே பார்த்து உணர்தல் வேண்டும்.

அங்காரகன் பூசை: நவக்கிரகங்களில் ஒருவரான செவ்வாய் (அங்காரகன்) பூசித்த ஸ்தலம் அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில். மங்கள தீர்த்ததில் மங்கள வாரத்தில் தமக்குற்ற நோய் நீங்கத் தாளிப்பனையின் கீழிருந்த சிவமூர்த்தியை இவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

வழிபட்டு அருள் பெற்ற இத்தலத்தை செவ்வாய்க்கிழமை ஆயிலம் என்றே போற்றுவர். மங்களவாரம் ஏனும் செவ்வாய்க்கிழமை மிகவும் விசேசமான நாள்.

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

ஒவ்வொரு ஆண்டிலும் தை மாதமும் மாசி மாதமும் விசேடமான காலங்களாகும். இவ்விருதிங்களிலும் வரும் 10 செவ்வாய் கிழமையிலும் இவ்வாலயத்தைக் கண்ணுறத்துடிக்கும் அன்புள்ளங்கள் எத்தனை எத்தனையோ மணமக்கள் செவ்வாய் தோஷம் நீங்க வழிபட வேண்டிய இத்திருத்தலம்.

பச்சரிசி மாவிளக்கு, தினைமாவு, நெய் விளக்கு, உப்பு -மிளகு முதலிய வழிபாட்டிற்குரிய பொருள்களைக் கொண்டு மிகவும் சிறப்பாக வழிபடுவர்.இப்பகுதி வாழ் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு இங்குள்ள இறைவன், இறைவி மற்றுமுள்ள பரிவார மூர்த்திகளின் பெயர்களைச் சூட்டி மகிழ்கின்றனர். திருநள்ளாறு போன்றே கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ள சனிபகவானுக்கு நிகழும் சனிப்பெயர்ச்சி மற்றும் குருப்பெயர்ச்சி போன்றே நாள்களில் வழிபடுவோர் ஏராளம் ஏராளம். ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெற வேண்டிய வைபவங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுகின்றன.

எல்லா நாள்களும் இறை வழிபாட்டிற்குகந்த நாள்களே! இருப்பினும் மிக முக்கியமானவை பஞ்ச பருவங்கள். அவை தமிழ் மாதப்பிறப்பு, நிறைமதி (பௌர்ணமி) மறைமதி (அமாவாசை) கார்த்திகை, பிரதோஷம் என்பனவாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

திருக்குடமுழுக்கு 26-1-2004-ல் நடைபெற்றது.

இருப்பிடம்: சென்னைக்கு மேற்கே 25 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆலய தரிசன நேரம்: காலை 6.00 முதல் 12.30 மணிவரை, மாலை 5.00 முதல் 8.30 மணிவரை.

சிறப்புற மணியே செவ்வாய்த் தேவே
குறையிலாத ருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

மேற்கண்ட துதியை ஆழ்ந்து படித்து பின் செவ்வாய் ஓரையில் ஒன்பது நெய்தீபம் ஏற்ற சகல நோய்களும் நீங்கி வளமோடு வாழ்வோமாக. போன்: 044-26491444

செவ்வாய் ஓரை

கிழமை	காலை	மாலை	இரவு
ஞாயிறு	–	12 – 1	7 – 8
திங்கள்	9 – 10	4 – 5	–
செவ்வாய்	6 – 7	1 – 2	8 – 9
புதன்	10 – 11	5 – 6	–
வியாழன்	7 – 8	2 – 3	–
வெள்ளி	11 – 12	–	6 – 7
சனி	8 – 9	3 – 4	–

தொகுப்பாசிரியர்: புதுவை. **வெ. சுப்ரமணியன்,** M.A.,D.A.,
எண்கணித சோதிடர், தொடர்பு எண்: 99940 73595

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Heritage Foundation Collection, Sholinganallur, Chennai

திருநீறு அணிவதன் சிறப்பு:

1. உடல் நாற்றத்தைப் போக்கும்.
2. தொத்து நோய்க்கிருமிகளைக் கொல்லும்.
3. தீட்டு கழிக்கும்.
4. உடலைச் சுத்தம் செய்யும்.
5. வியாதிகளைப் போக்கும்.
6. பில்லி, சூனியம், கண்ணேறு பாதிக்காது காக்கும்,
7. முகத்திற்கு அழகைத் தரும்.
8. ஞாபகசக்தியை அதிகரிக்கும்.
9. புத்தி கூர்மையைத் தரும்.
10. ஞானத்தை உண்டாக்கும்.
11. பாவத்தைப் போக்கும்.
12. பரகதியைத் தரும் (வீடு பேறு)
13. நெற்றியின் உள்ளே சுரக்கும் முப்பத்திரண்டு விதமான நீரை நன்கு உலர்த்தி சைனஸ் என்ற பெருந்தொல்லையிலிருந்து முற்றிலும் நம்மைக் காக்கப் பெரிதும் உதவுகிறது.
14. திருநீறு பூசுவதன் மூலம் நமது மூளையும் நன்கு வளர்ச்சி பெற்றுச் சிறக்கும்.
15. விபூதியை நாம் தினமும் பூசுவதால், இம்மையில் செய்த பாவங்கள் மட்டுமல்லாது, முன் செய்த பாவங்களும் நீங்கிவிடும்.
16. விபூதி அணிந்தவுடன் சாப்பிட்டால். நாம் கையைக் கழுவியிருந்தாலும், கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை உடலினுள் செல்வதைத் தடுக்கிறது. அதாவது விபூதி கிருமி நாசினியாகச் செயல்படுகிறது.

தினமும் திருநீர் அணிதல் வேண்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Padmakar Pandit Sivajiganesharan Collection. Shivaganesan Chennai

சிட்டி யூனியன் பாங்க் லிட்

16, துலுக்கா தெரு, (பேருந்து நிலையம் அருகில்)
குன்றத்தூர் கிளை, சென்னை– 600 069.
போன் : 9344023512 / 24780331

Highest Interest on Deposits

10%p.a.

நகைக்கடன் 1 கிராமுக்கு
₹ 2250/- 10.75% p.a.
வட்டி ₹ 0.90 பைசா மட்டும்

CUB
Trust and Excellence
SINCE 1904

ராசியான பாங்க் !
ரசியான பாங்க் !

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.